ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 5. நால்வரும் சுவர்க்கம் புக்க சருக்கம்

454. வாசநின் றறதா சோலை மழையென மதுக்கள் பெய்து
மூசுதேன் முழங்க மஞ்சை முகிலென அகவி முத்தின்
தூசுலாம் அலங்க லார் போல் தொடங்கிய நடங்கள் ஓவாக்
கோசலை என்ப துண்டுஇக் குவலயம் புகழும் நாடே.

நறுமணம் நிறைந்து நிற்கும் மலர்ச்சோலையில் மலர்களிலிருந்து மழை போல் சொரியும் தேனை உண்டு முழங்கும் தேனீக்களின் கூட்டு ஒலியினை மேகத்தின் முழக்கமாக நினைத்து மயில்கள், முத்துக்கள் தொடுத்த முன்தானைப் பூந்துகில் புனைந்து எழில் பெற ஆடும் இள நங்கையர் போல், அழகிய தோகையை விரித்து அழகாக ஆடும். இத்தகு உலகம் புகழும் கோசலை என்னும் பெயருடைய நாடு அமைந்திருந்தது.

455. திருத்தகு நாடி தற்குத் திலகமாய்த் திகழ்ந்து சென்றா
வருத்தந் தீர் மாட மூதூர் மறையவ ருறையும் மாண்ட
விருத்தநல் கிராமம் தன்னுள் மிருகாயணன் என்று மிக்கான்
ஒருத்தனங் குளனற் சாந்தி உருவு கொண்டனைய நீரான்.

செல்வம் செழித்த இந்த நாட்டிற்குத் திலகம் போல் விளங்கித் தன்னை அடைந்தவர்களுடைய துன்பங்களைத் துடைப்பதும், மாட மாளிகைகள் நிறைந்த மிகப் பழைமையானதும், அந்தணர்கள் வாழ்விடமாகவும் விளங்கிய மாண்புமிக்க அதன் பெயர் விருத்த கிராமம் என்பது. அங்கே மிகச் சிறந்தவனும் அமைதியே உருவானவனுமாகிய 'மிருகாயணன்' என்பவன் வாழ்ந்து வந்தான்.

456. அதிர்பட நடத்தல் இல்லாள் அவன் மனைக் கிழத்தி அஞ்சொல்
மதுரையென் றுரைக்கப் பட்டாள் மகளும்வா ருணியா முத்தின்
கதிர்நகைக் கருங்கண் செவ்வாய்க் கால்பரந் தெழுந்து பொன்னின்
பிதிர்பரந் திருந்த கொங்கைப் பிணையனாள் ஒருத்தி யானாள்.

மென்மையான நடையும், இனிய சொற்களையுமுடைய 'மதுரை' என்பவள் அந்த அந்தணனுக்கு மனைவியாக விளங்கினாள். அவர்களுக்கு ஒரே மகள் 'வாருணி'. அவள் முத்துப் போன்ற பற்களையும், சிவந்த வாயினையும், தேமல் படர்ந்த தனங்களையுமுடையவளாய் பெண் மான் போன்ற அழகுடன் பொலிந்தாள்.

457. கதிர்மறை பொழுதிற் கான்ற கமலமும் குவளையும்போல்
மதுரையும் மகளும் வாட மறையவன் மரித்துப் போகி
எதிர்வரு பிறவி யில்லார் இடையறா அயோத்தி யாளும்
மகிபலன் தனக்குத் தேவி சுமதிக்கும் அரிவை யானான்.

கதிரவன் மறையும் மாலை நேரத்தில் தாமரையும், குவளையும் அழகிழந்து வாடுவதுபோல் மனைவியும், மகளும் மனம் கலங்க அந்தணனாகிய மிருகாயணன் இறந்து போய் பிறவியைப் போக்கும் புண்ணிய நகரமான அயோத்தி நகரத்தின் மன்னன் மகிபாலனுக்கும் மனைவி சுமதிக்கும் மகளாகப் பிறந்தான். (அவள் பெயர் இரணியவதி)

458. இரணிய வதியென் பாள்பேர் இளமயில் அனைய சாயல்
வரிசிலைப் புருவச் செவ்வாய் வல்லிதான் வளர்ந்த பின்னைத்
தரணிமேல் அரச ரெல்லாம் தையலைத் தருக என்னச்
சுரமைநா டுடைய தோன்றல் திண்புயம் துன்னு வித்தார்.

இரணியவதி என்னும் பெயருடைய அரசிளங்குமரி மயில் போன்ற சாயலையும், வளைந்த வில் போன்ற புருவங்களையும், செந்நிற வாயினையும் பெற்று மலர்க்கொடிபோல் உலகத்து மன்னர்களெல்லாம் அவளை மணம் விரும்பி வேண்ட இறுதியில் சுரமை நாட்டின் வலிமை மிக்க தோள்களையுடைய வேந்தன் பூரசந்திரனுக்கு மணம் முடிக்கப்பட்டாள்.

459. போதன புரத்து வேந்தன் பூரசந் திரனும் தோகை
மாதனம் புணர்ந்து வந்த இன்பத்து மயங்கு நாளுள்
காதலாள் மதுரை அந்தக் காவலன் தேவி தன்பால்
மாதராள் ஒருத்தி யானாள் மற்றவள் நீ கண்டாயே.

போதனபுரத்து மன்னன் பூரசந்திரனும், மயில் போன்ற இரணியவதியும் மிக்க இன்பத்தை எய்தி வாழ்வில் மயங்கிக் கிடந்த காலத்து முற் பிறவியில் மனைவியாக இருந்த மதுரையானவள் இப்பிறவியில் இரணியவதிக்கு மகளாகப் பிறந்தாள். இராமதத்தையே! நீ தான் அவள் என்பதை அறிந்துகொள்வாய் (என முனிவன் கூறினான்).

460. அருந்தவ னருளி னால்அப் பத்திர மித்தி ரன்தான்
திருந்திய குணத்து நின்பால் சீயசந்திர னென் றானேன்
வருந்துநுண் ணுடையி னாள் அவ் வாருணி வந்துன் காதல்
பொருந்திய புதல்வ னாய்அப் பூரசந்திர னென் றானாள்.

வரதர்ம முனிவருடைய அருளுபதேசப் புண்ணியத்தினால் மேலான குணங்களையுடைய பத்திரமித்திரன் உன் வயிற்றிலே சீயசந்திரன் என்னும் நான் மகனாகப் பிறந்தேன். முன்பு உனக்கு மகளாக இருந்த வாருணி, இப்போது பூரணசந்திரன் என்னும் இரண்டாவது மகனாகப் பிறந்து உன் அன்பிற்குரியவனாக விளங்குகின்றான்.

(வேறு)

461. ஆதலால் அவன்க ணீங்காக்
காதலை ஆயி னாய்நீ
போதுலாம் அலங்க லானும்
கோதிலாக் குணத்த னாமே.

தொடர்ந்து வரும் உறவால் அவன் மீது மாறாத அன்பு கொண்டுள்ளாய். மலர் மாலைகளணிந்த பூரணச்சந்திரனும் குற்றமற்ற உயர்குணமுடையவன் தான் அதில் ஐயமில்லை.

(வேறு)

462. வினையெனும் குயவன் நம்மை வேண்டுரு இயற்றல் கண்டாய்
அனகனாம் உருவம் தன்னைப் பெண்ணுரு ஆக்கி யாங்கே
மனைவியை மகளு மாக்கி மகளையே மைந்த னாக்கி
நினைவினான் முடித்து நின்றார் நீதியார் கடக்க வல்லார்.

தேவியே! சிந்தித்துப்பார். வினை என்னும் குயவன் நம்மை எப்படி எப்படி யெல்லாம் உருமாற்றி யிருக்கின்றான். பாபங்களைப் போக்கும் அந்தணனைப் பெண்ணாகப் பிறக்கச் செய்தான். அப்போது மனைவியாக இருந்தவளை மகளாகவும், மகளை மகனாகவும் செய்து அவரவர் மனப் பரிணாமப்படி மாற்றியுள்ள நியதியை யாரால் மாற்ற இயலும்?

463. பத்திர பாகு என்னும் பரமமா முனிவன் பாரில்
உத்தமன் பாதம் சேர்ந்துன் பிதாவின்று முனிவ னாகி
இத்தல மேத்த நின்றான் எனக்குவந் திதத்தை யோதிச்
சித்தமெய் மொழிகள் மூன்றுஞ் செறிவித்த குரவ னாவான்.

மிகச் சிறந்த உத்தம முனிவராகிய பத்திரபாகு என்பவரது பாதங்களை அடைந்து, துறவை மேற்கொண்ட உனது தந்தை உலகம் ஏத்துமாறு தவவாழ்வை மேற்கொண்டார். அவரே எனக்கு நன்மை பயப்பதான அறத்தினை மனங்கொள்ளச் செய்து மனம், மொழி, செயல்களை நன்னெறிப்படுத்தி மேல் நிலைப்படுத்திய குருவாக விளங்கினார்.

464. சாந்தமா மதியைச் சார்ந்து தையலாய் உனைப் பயந்தாள்
காந்திதா னாயி னாள்அக் காவலன் சீய சேனன்
பாந்தளான் மரித்துப் போகிச் சல்லகீ வனத்துக் மைமா
வேந்தனாய் முனிய வேடர் இட்டபேர் அசனி கோடம்.

மேலும் உன்னை ஈன்ற அன்னையானவள் சாந்தி மதிகள் என்னும் துறவியைச் சேர்ந்து போற்றற்குரிய ஆர்யகையாயினாள். மன்னன் சீயசேனன் பாம்பினால் இறந்து சல்லகி என்னும் வனத்திலே யானையாகப் பிறந்தான். அக்காட்டிலே வசித்த வேடர்கள் அந்தச் சினம் மிக்க யானைக்கு அசனி கோடம் எனப் பெயரிட்டனர்.

465. நாகாந்தத் தென்னைக் காணா மதத்தினாலந்த நாகம்
வேகாந்தத் தாலென் மேலே வெகுளியா லோடி வந்தது
ஆகாசத் தியானெ ழுந்தேன் அங்குவந் தென்னைக் காணா
ஏகாந்த நெறிபுக் கின்மை கண்டவ னொருவ னொத்தே.

மலையுச்சியிலே என்னைக் கண்ட அந்த யானையானது மிக்க மனக் கிளர்ச்சியுடன் சினம் பொங்க ஓடி வந்தது. யான் ஆகாயத்தில் எழுந்தேன். என்னைக் கண்டு ஏகாந்த நெறியை நம்பி இறுதியில் எதையும் அறிய இயலாதவனைப் போல் ஏமாந்து நின்றது.

466. வெங்கதங் கடாவக் கூற்றொத்து என்னை மேனோக்கிப் பார்க்கச்
சிங்கமா புரத்து வேந்தே! சீயமா சேன ஒய்நீ
இங்கு வந்து யானை யானாய் பாவத்தால் இதனை விட்டால்
பொங்கிவீழ் நரகந் தன்னில் பொருந்தவோ முயற்சி யென்றேன்.

அந்த யானை மிக்க கோபத்திற்கு ஆட்பட்டு யமனைப் போல் என்னை நிமிர்ந்து பார்த்தபோது யான் கூறினேன்! 'ஏ, சிங்கபுரத்து வேந்தனாகிய சீயசேனனே! நீ செய்த பாபத்தினாலே யானையாகப் பிறந்துள்ளாய். மீண்டும் மேலெழும்பி கீழே விழுகின்ற கொடிய நரகத்தில் பிறப்பதற்காகவா முயற்சிசெய்கின்றாய்.

467. அரசனாய்ப் பெரிய இன்பத்து அழுந்தக் கண்டக் கணாலே
கரியதாய்ப் பெரிய துன்பத்து அழுந்தவிக் கானிற் கண்டேன்
பெரியதோர் பாவத் தாலிப் பிறவியைப் பெரிது மஞ்சித்
திருவற மருவு யானச் சீயசந் திரனென் றிட்டேன்.

மேலும், முற்பிறவியில் அரசனாக இருந்து அனுபவித்த இணையற்ற இன்பங்களைக் கண்ட அதே எனது கண்களால் இப்போது நீ யானையாகிப் படும் பெரும் துன்பத்தையும் காண்கிறேன். எனவே நீ செய்த பெரும் பாவத்தால் இந் நிலை தோன்றியது எனப் பாபத்திற்கு அஞ்சி நன்மை பயக்கும் நல்லறத்தை மேற்கொள்வாயாக' என்று கூறினேன்.

468. என்றலும் எழுந்தபோதத் திறந்தவப் பிறவி தன்னை
அன்றவன் அறிந்து மூர்ச்சித் தருவரை போல வீழ்ந்தான்
நின்றதோர் படியிற் றேறி நிறைதவன் போல நின்றான்
சென்றுயான் அறத்தைக் கூறச் செவியினைத் தாழ்த்த லோடும்.

நான் அவ்வாறு கூறியதும் அதற்குத் தோன்றிய முற்பிறவி அறியும் ஞானத்தால் தான் முற்பிறவியில் அரசனாக இருந்ததை உணர்ந்து இன்றையப் பிறவியை ஒப்பிட்டு மயங்கி மலை சாய்வதைப் போல் வீழ்ந்தான். பிறகு தெளிந்து தேறி முற்றும் உணர்ந்த முனிவனைப்போல் அமைதியாக நின்றான். இது தக்க சமயமென்றுணர்ந்து நான் அறத்தைக் கூற தனது இரு செவிகளையும் தாழ்த்திக் கேட்கத் தொடங்கினான்.

469. யாக்கையும் கிளையும் ஆதி யாவையும் நின்ற வில்லை
வீக்கிய வினையின் துன்பம் விலக்கலா மரணுமில்லை
தீக்கதி நான்கிற் சார்ந்து செல்வழித் துணையுமில்லை
நீக்கருங் குணங்க ளல்லா னின்றதான் இல்லை யன்றே.

நமது உடலும், உற்ற உறவினர்களும், மற்ற செல்வங்கள் யாவும் நிலைத்து நிற்பவை அல்ல. நமது ஆசை செற்றம் முதலியவற்றால் முயன்று சேர்த்த வினைகள் மூலம் விளையும் துன்பங்களைப் போக்கக் கூடிய சாதனங்களும் இல்லை. துன்பங்களைத் தரும் நான்கு பிறவிகளில் மாறி மாறி செல்லுகின்ற போது பிரிக்க இயலாத ஆன்ம குணங்களைத் தவிர நிலையானவை எதுவுமில்லை.

470. உண்டுநாம் விட்ட வல்லாப் புற்கல மொன்று மில்லை
பண்டுநாம் பிறந்தி டாத பதேசமு முலகி னில்லை
கொண்டுநாம் நின்ற யாக்கை குணமிலாப் பூதி கந்தம்
மண்டிநாம் புலத்தின் வீழ்தன் வினைவரும் வாயில் என்றேன்.

அனாதி காலமாக நாம் எடுக்காத புத்கல மில்லை. அதாவது உடலில்லை, நாம் பிறவி எடுக்காத இடம் உலகில் அணுவளவும் மிச்சமில்லை. நாம் இப்போது பெற்றுள்ள உடலும் நிலையற்றது மட்டுமல்ல தீ நாற்றமுடையது மாகும். அத்தகைய உடலைப் பெற்று ஐம்புலங்கட்கு அடிமையாகிக் கிடத்தல் மேலும் வினைகள் சேர்தற்குக் காரணமாகும்.

471. அரியதிவ் வுலகின் வென்றோர் திருமொழி யதனைப் பெற்றால்
பெரிய நற்காட்சி ஞான வொழுக்கமா மவற்றிற் பின்னை
வருவினை வாயி லெல்லா மடைக்க முன் மிடைந்த பாவம்
நிருசரைச் செல்லும் இந்த நெறியைநீ நினைக்க வென்றேன்.

இவ்வுலகில் பெறுதற்கரியது யாதெனில் விருப்பு வெறுப்பற்று, கொடிய வினைகளை வென்ற இறைவனது திருமொழியி லெழுந்த பரமாக மங்களாகும். அதைப்பெற்று உணர்ந்து தெளிந்தோமானால் பெருமைமிக்க நற்காட்சி, நல்ஞானம், நல் ஒழுக்கம் ஆன்மாவிற்கு ஏற்படும். அதனால் வினை வரும் வாயில்கள் அடைபடும். மேலும் அவை மூன்றும் உறுதிப்பட்டால் முன்பு சேர்த்த வினைகளும் உதிரும். எனவே இந்த நெறியை உணர்வாயாக என்று கூறினேன்.

472. வெருவுரு துன்ப மாக்கும் விலங்கினுள் எழுந்து வீழ்தல்
நரகிடை மருவும் துன்பம் நரர்க்கெலாம் குடும்பம் ஓம்பல்
மருவிய தேவ லோகின் வழுத்தரல் வான வர்க்காம்
துருவமாய் நின்ற துன்பம் சொன்னநாற் கதிக்கு மென்றேன்.

மேலும் கேள், விலங்கு கதியில் எப்போதும் அச்சத்துடன் இருப்பது இயல்பான துன்பமாகும். நரகத் துன்பத்தின் இயற்கை யாதெனில் ஆகாயத்தே எழும் பித்தலை கீழே வீழ்தலாகும். மனிதர்களுக்குத் தங்கள் குடும்பத்தைப் பராமரித்தல் அனைவர்க்கும் பொதுவான துன்பமாகும். தேவர்களுக்கு அவர்களது மரண பயம் இயல்பானதாகும். இவை நான்கு கதி உயிர்கள் எய்தும் துன்பங்களாகும்.

473. மனத்திடைப் பிறக்குந் துன்பம் வந்துறு மவற்றின் துன்பம்
தனுத்தினில் பிறக்குந் துன்பம் தானியல் பாய துன்பம்
எனச்சொலப் பட்ட நான்கும் யாவர்க்கு மாகும் இன்ன
நினைத்தறம் புணரின் நின்ற தீக்கதி நீங்கு மென்றேன்.

மேலும், மனமுடைய உயிர்களுக்கு மனதில் தோன்றும் துயரமும், ஒன்று நினைக்க வேறொன்றாக முடிய அதனால் தோன்றும் துயரமும், உடலில் தோன்றுகின்ற பல்வேறு துன்பங்களும், மற்றும் முன்பே சொன்ன இயல்பான துன்பமு மாகிய குடும்பம் ஓம்பல் துன்பமும் சேர்ந்து நால்வகைத் துன்பங்களாகும். (அதாவது, மனோ துக்கம், ஆகந்துக துக்கம், சரீர துக்கம், இயல்பு துக்கம் என்பனவாகும்.)

474. வினயத்தோ டிறைஞ்சிக் கேட்டும் முனியைப்போல் விளம்பிற் றெல்லாம்
மனம்வைத்து வணங்கிக் கேட்டு வதங்கள்பன் னிரண்டும் மேவிப்
பனையொத்த தடக்கை மாநல் லுயிர்களைப் பாதுகாக்கும்
முனியொத்துக் கருணை வைத்தெவ் வுயிரையும் ஓம்பிற் றன்றே.

பனைமரத்தைப் போன்று திரண்டு நீண்ட துதிக்கையினை யுடைய அந்த யானையானது – மிக்க வணக்கத்துடன் நயந்து கேட்கும் ஒரு முனிவனைப் போன்று என்னால் உரைக்கப் பட்ட அறங்களை எல்லாம் பணிவுடன் கேட்டு மனத்தினை ஒருநிலைப்படுத்தி பன்னிரு விரதங்களையும் ஏற்று ஓரறிவுயிரையும் ஓம்புகின்ற துறவியைப் போன்று கருணைவைத்து உயிர்களைப் போற்றியது.

475. பொய் கொலை களவு காமம் அகற்றி புலைசு தேன் கள்
மெய்யுறத் திசை யினோடு பொருளினை வரைந்தும் மேனி
நையினும் வதங்கள் நையா வகையினால் நாக ராசன்
சய்யமா சய்ய மத்திற் றலைநின்றார் போலச் சென்றான்.

யானைகளின் தலைவனான அவன் கொலை, களவு, பொய், ஆசை முதலியவற்றை அடியோடு ஒழித்து புலால், கள், தேன் இவைகளை உண்ணாது நீக்கி இத்துடன் இந்தத் திக்கில் இவ்வளவு தூரத்திற்கு மேல் செல்ல மாட்டேன் என்னும் திக்விரதம் ஏற்று தனது தேவையை மிகவும் குறைத்து உடல் நைந்தாலும் தான் ஏற்ற விரதங்களைக் கைவிடாமல் சய்யமா சய்யமம் என்னுக் குணத்தானத்தில் பொருந்தி நின்ற ஒரு உத்தம விரதமுடையவனைப்போல விளங்கினான்.

476. உவர்ப்பொடு வெறுப்பின் ஒன்றி உடம்பொடு புலங்கள் தம்மேல்
துவர்ப்பசை நான்குநீங்கிச் சொன்ன பன்னி ரண்டும் உன்னிச்
சவர்ச்செய்கை யின்றிச் சித்தம் சாந்தியி னன்மை தீமைக்கு
உவத்தல்காய் வின்றிப் பக்கம் திங்கணோன் பொன்றிச் சென்றான்.

இந்த உடல் நிலையாமை என்ற உணர்வோடு ஐம்புல இன்பங்களை வெறுத்து உறுதியுடன் சினம், செருக்கு வஞ்சனை, ஆசை ஆகிய நான்கையும் நீத்து ஆகமங்கள் கூறும் பன்னிரு சிந்தனைகளை மேற்கொண்டு தீயதை ஒதுக்கி வெறுப்பு விருப்பின்றி இன்ப துன்பங்களைச்சமமாக பாவித்து மாதம் இருமுறை மாதம் ஒரு முறை மேற்கொள்ளும் நோன்புகளை மேற்கொண்டு ஒழுகினான்.

477. வாரணம் தின்று விட்ட வற்றிய திவலும் புல்லும்
பாரணை யாகப் பார்த்தங் கருந்தவம் பயின்று பான்மைக்
காரண மிது வென் பான்போற் காலங்கள் பலவும் நோற்று
நீரணைந் தோடும் யூப கேசரி நதியைப் புக்கான்.

மற்ற யானைகள் தின்று கழித்த உலர்ந்த சருகுகளையும், புல்லையும் தனது உபவாசம் முடிந்தபோது நன்கு ஆராய்ந்து உணவாக ஏற்று இவ்வாறே தனது அரிய நோன்பினை மேற்கொண்டு அதிலே பழகி பான்மைத் தன்மைக்குக் காரணம் இதுவேயாகும்

என்று உணர்த்துவது போல் நீண்ட நாள்கள் நோற்று, இறுதியில் தனது உண்ணா நோன்பினை முடிக்கும் பொருட்டு, யூபகேசரி என்னும் ஆற்றில் நீர் அருந்த சென்றது.

478. உரையினுக் கரிய வண்ணம் ஒருதிங்கள் நோன்பு முற்றி
வரையினைப் பிழிந்த தேபோல் வற்றிய காயத் தாற்றங்
கரையினைச் சார்ந்து நீருட் கையினை நீட்டக் கைமா
நிரையினுக் கரசன் கால்கள் நிலத்திடைக் குளிப்ப நின்றான்.

யானைக் கூட்டங்களுக்கு அரசனாகிய அவன் கூறுதற்கரிய வண்ணம் ஒரு திங்கள் உண்ணா நோன்பினை முடித்து, மலையைப் பிழிந்து போட்டது போன்ற இளைத்து வற்றிய உடலோடு நீர் அருந்தி தனது உண்ணா நோன்பினை முடிக்கும் எண்ணத்துடன் ஆற்றின் கரையினைச் சேர்ந்து. நீரில் தனது துதிக்கையை நீட்டினான். அப்போது சேற்று மண்ணிலே கால்கள் அழுந்த அதிலிருந்து விடுபட முடியாமல் செயலற்று நின்றான்.

479. அக்கணத் தமைச்சன் நாகஞ் சமரமாய் அதனை விட்டுக்
குக்குட வடிவிற் பாம்பாய்ப் பிறந்தவக் குபதன் காணா
மிக்கெழுந் தனலுங் கோபத் தோடி மேலேறி நெற்றி
சிக்கெனக் கதுவத் தீரன் காயமுந் தியாகம் செய்தான்.

அந்தச் சந்தர்ப்பத்தில், முன்பு அமைச்சனாய் இருந்த சத்யகோடன் பாம்பாகப் பிறந்து பிறகு சமரீ என்னும் விலங்காகி இப்போது கோழிப் பாம்பாகப் பிறந்து, அதே காட்டில் அந்த வைரியானது யானையைக் கண்டதும் அடங்காக் கோபத்துடன் விரைந்து யானையின் மீது ஏறிக் கடிக்க, உறுதி தளராது சமதா பாவத்தோடு உடலைத் தியாகம் செய்யும் வீரனாக விளங்கினான்.

480. மலையினைச் சூழ்ந்த மஞ்சின் நஞ்சுவந் தெங்கும் சூழ
நிலையினிற் றளர்த லின்றி நின்று மாதவன் தன்பாதம்
தலைமிசைக் கொண்டு பஞ்ச மந்திரஞ் சிந்தை செய்து
நிலையிலா வுடம்பு நீங்கி நெறியிற்சா சாரம் புக்கான்.

மலையை மூடிய கார்முகில் போல் உடல் முழுதும் நஞ்சு சூழ்ந்த போதும் மனத்தளர்ச்சியின்றி, ஆன்ம சிந்தனையோடு தனது குருவாகிய எனது பாதங்களைத் தியானம் செய்து - நிலையற்ற உடலை விட்டு நீங்கி, சுபோப யோகம் என்னும் உயர் சிந்தனையோடு சகஸ்ரார கல்பம் என்னும் விண்ணுலகடைந்தான்.

481. ஆயுவுங் கதியு மானு புவ்வியு மக்க திக்கே
ஏயநல் வினைக ளெல்லாம் எழுந்தவற் றோடுஞ் சென்று
பாயநல் லமளி மேலோர் பார்த்திப னணிந்து வந்து
மேயினா னெழுந்த தேபோல் வினையினான் முடிந்தெ ழுந்தான்.

தேவ ஆயுள்-தேவகதி-அனுபூர்வி நாமம் ஆகிய இவைகளுக்கேற்ற புண்ணிய வினைகளுடன் சேர்ந்து, மேற்கதியில் சென்று விண்ணுலக அமளி மேல் அணிகலன்கள் அனைத்தையும் அணிந்த பதினாறு வயதுடைய அரச குமாரன் படுக்கையிலிருந்து உறங்கி எழுவது போல், (தனது பழைய பிறவியை விட்டு) அரசனாக அவதரித்தான்.

482. ஆனைதன் னுருவு நீங்கி இரவிமுன் பிரபைத் தோன்றி
வானத்து வில்லைப் போல வடிவெலாம் சமைந்து மூழ்த்தில்
தேனொத்த அலங்க லான்பேர் சீதரன் என்ப தாகும்
மானொத்த நோக்கி னார்தம் வடிக்கணுக்கு இலக்க மானான்.

அசனி கோடம் என்னும் அந்த யானையானது தனது விலங்குடல் விட்டு நீங்கி, சூரியப்பிரபை என்னும் தேவ விமானத்தில், ஒரு நாழிகை நேரத்திற்குள் வானவில் போன்ற

வனப்போடு பொருந்தி கூர்மையான நோக்குடைய தேவ மாதர்கள் மயங்கும் எழில் மிக்கவனானான். மலர் மாலைகள் பொலிந்த அவனது பெயர் 'ஸ்ரீதரன்' என்பதாம்.

483. முடியுங் குண்ட லமுந் தோடும் ஆரமுங் குழையும் பூணும்
கடகமுங் கழலும் பட்டுங் கலாபமும் வீழ நூலும்
உடனியல் பாகித் தோன்றி யொளியுமிழ்ந் திலங்கு மேனி
படரொளி பரப்ப மஞ்சிற் பருதியி னிருந்த போழ்தின்.

தலையில் மணி முடியும், காதுகளில் குண்டலமும் தோடும் மார்பில் முத்து மாலைகளும், கைகளில் கடகங்களும், இடையில் மேகலையும், கால்களில் வீரக்கழலும் மற்றும் அனைத்து அணிகளும் பட்டாடைகளுடன் பூணூல் பொலிய கற்பக மலர் மாலைகள் மணம் கமழ, உடல் தெய்வீக ஒளியை உமிழ, மேகத்தின் விளிம்பில் மிளிரும் கதிரவனைப் போல் தான் அவதரித்த படுக்கையில் அமர்ந்திருந்தான்.

484. காரென மலர்கள் மாரி கற்பக மரங்கள் வீழ்த்த
வாரணி முரச மெங்கும் முழங்க நந்தன வனத்தில்
வேரியும் தாதும் ஏந்தி மந்த மாருதங்கள் வீசச்
சீரணி கொங்கை யாருந் தேவரும் சென்று சேர்ந்தார்.

மழை போல் கற்பக மரங்கள் மலர்களைச் சொரிந்தன, வார்களினால் நன்கு அமைக்கப்பட்ட பேரிகள் முழங்கின, தென்றலானது பூந்தாதுக்களையும் நறுமணத்தையும் பரப்பி மெல்ல அசைந்தது, குறைவற்ற அணிகளுடன் அழகிய தனங்களையுடைய தேவ மாதரும் தேவர்களும், சீதர தேவனைச் சூழ்ந்தார்கள்.

485. எத்திக்கும் பார்த்தி தென்னோ யாவரோ யான்பி னாரோ
சித்தத்துக் கினிய தேசம் யாரதோ வென்றி ருந்து
தத்துறும் போழ்தில் அந்தப் பவத்தைச் சார்ந் தெழுந்த வோதி
கைத்தலப் படிகம் போலக் கண்டது கருதிற் றெல்லாம்.

நான்கு திசைகளையும் நோக்கிய சீதர தேவன் நான் காண்பதென்ன? இவர்கள் யார்? நான் யார்? எனது மனதை மகிழ்ச்சியில் ஆழ்ந்தும் இந்த இடம் யாருடையது என்று சிந்தித்து வியந்து நின்றபோது விண்ணுலக இயல்பின்படி தோன்றிய ஓதி அளவில், தனது மனதில் தோன்றிய வினாக்களுக்கெல்லாம் கையகத்தே வைத்த படிகம் போல விளக்கம் தோன்றியது.

486. தந்தியைத் துடக்க மாய அறிந்துயான் முன்பு செய்த
மந்தமா தவத்திற் பெற்ற துறக்கமந் தாரஞ் சூழ்ந்த
இந்திர விமான மென்னை யெத்திக்குஞ் சூழ வோதி
வந்து நின் றிறைஞ்சு கின்றார் வானவர் தாங்க ளென்றான்.

தான் எடுத்த யானைப் பிறவியை அறிந்து அப்பிறவியில் செய்த அற்ப தவத்தின் பயனால் நான் அடைந்துள்ள இந்த இடம் தேவருலகம். மந்தார மலர்களால் சூழ்ந்துள்ள இது இந்திர விமானம். என்னைச் சூழ்ந்து புகழ்ந்து போற்றுகின்றவர்கள் தேவர்கள் என நன்குணர்ந்தான்.

487. பாடுவார் மதுர கீதம் தேவிமார் மின்னுப் போனின்று
ஆடுவார் அரம்பை யார்க ளரிவையர் இலயத் தோடும்
ஊடுதா னெழுந்த வோசை துந்துபி யோசை யென்று
நீடியா தவதி யால் பார்த் தறிந்தவன் இருந்த போழ்தில்.

இனிய இசையோடு பாடுகின்றவர்கள் தேவ மாதர்கள், லயம் தவறாது ஆடுகின்றவர்கள் அமர குலப் பெண்கள், அவருக்கு இசைய எழுகின்ற ஓசை துந்திபியின் ஓசையாகும் என்பதையும் தனது அவதியினால் அறிந்துகொண்டான் – அப்போது.

(வேறு)

488. வென்றியும் திருவும் பரமாயுவும்
ஒன்றி வையகம் உள்ளளவுஞ் செல்க
என்று சொல்லி யிறைஞ்சிய வானவர்
நின்று பின்செயு நீதிக ளோதினார்.

வானவர்கள் வணங்கி நின்று, உனக்கு வெற்றியும் குறைவற்ற செல்வமும், நீண்ட ஆயுளும் அமைந்து உலகமுள்ளளவும் பொருந்துவதாக, என வாழ்த்திய பின், பிறகு நடைபெற வேண்டிய சில முறைகளையும் கூறினர்.

489. மஞ்சனஞ் சமைத் தார்மதி போன்முகத்து
அஞ்சொ லாரது முன்ன மர்ந்துநீ
பஞ்ச காயம் பணித்த பிரானடிக்கு
அஞ்ச லிசெய் தமர்ந்த சிறப்புனி.

தேவனே! முதலில் நீ நறுமண நீரில் நீராட வேண்டும். பிறகு முழுமதி போன்ற முகத்தினையுடைய தேவமாதர்களுக்குக் காட்சியளிக்க வேண்டும். அடுத்து பான்மையாளர்களுக்கு நல்லறத்தை அருளிய அருக பெருமானது பாதங்களை அர்ச்சித்து முறைப்படி போற்றி வணங்க வேண்டும் என்றனர்.

490. தாவி லாத்தவத் தின்பய னாகிய
தேவர் தந்தொகை செய்வ தறிந்துபின்
நாவி னோசை நரம்பி னெழுங்குரல்
தாவி லாவி லயம்பயில் சாலைகாண்.

பிறகு, மேலான தவத்தினால் தோன்றிய தேவர்கள் ஆற்றுகின்ற செயல்களை அறிதல் வேண்டும், பல்வேறு இசைக் கருவிகளுடன் பாடல் பயிலுகின்ற நடன சாலைகளையும்,காண்பாயாக.

491. படங்க டந்தணி தங்கிய வல்குலார்
நுடங்கு நுண்ணிடை நோவ நுவலரும்
வடஞ்சு மந்த வனமுலை யின்பயன்
துடங்கு பின்னென மற்றவர் சொல்லினார்.

அதன் பிறகு, பாம்பின் படத்தினது எழிலை வென்ற அல்குலையும், அசைகின்ற கொடி போன்ற நுண்ணிடையினையும் பெற்றுள்ள தேவ மாதர்கள் இன்பமெய்துமாறு முத்து மாலைகளை யணிந்த தனங்களின் சுகத்தைப் பெறுவாயாக என வேண்டினர்.

492. நீதி யைக்கட வார்பெரி யோர்கள்தாம்
ஆத லாலம ரன்அவை செய்த பின்
காதியைக் கடி யும்திரு மாலடி
போது கொண்டு புகழ்ந்து பணிந்தனன்.

நல்லவர்கள் கூறும் நீதியைப் பெரியோர்கள் மீற மாட்டார்கள் என்பதற்கிணங்க சீதர தேவன் அமரர்கள் கூறிய வண்ணமே செய்து, பிறகு காதி கர்மங்களை ஒழித்த ஜின பகவானது திருவடிகளை மலர்களால் அர்ச்சித்துப் போற்றிப் புகழ்ந்தான்.

493. அரணடைந்த வெங் கானத் தானையாய் நின்றுன்
சரணடைந்தேன் இன்றிந்தச் சாசார னானால்
கரணமெலாம் வென்றுன்னைக் கண்டவர்கள் காம
மரணமிலா வீடெய்தல் மற்றோர் பொருளோ.

இறைவனே! நாட்டிற்குக் காவலாக அமைந்தக்கொடிய காட்டிலே யானையாகத் தோன்றி உனது பாதங்களைச் சேர்ந்தேன். அதன் பயனால் இன்று சகஸ்ரார கல்பத்திலே தேவனாகி இருக்கின்றேன். (இந்த அற்ப முயற்சிக்கே இத்தகைய பயன் என்றால்) இன்னும் மனம், சொல், செயல் இம் மூன்றையும் அடக்கி வென்று ஆன்ம பாவனையில் தூயராகி வினைகளை ஒழித்து உன் வழி நின்று உயர் பொருள் உணர்ந்தவர்கள் விருப்பு வெறுப்பும், பிறப்பு இறப்புமின்றி வீடெய்தல் அரிதாகுமோ!

494. நிழல்போல் நின்றுன்னை வந்தடைந்தார் மாற்றாம்
அழல் போக்கி அந்தமிலா இன்பத்தை யாக்கி
வழுத்தரா முத்தியின் கண் வைக்குநின் பொற்பாத
நிழற்சேரார் மாற்றா நெடுவழியைச் செல்வார்.

நிழல் போல நீங்காது நினது அடி சேர்ந்தவர்கள் சம்சார மென்னும், பிறத்தல் இறத்தலாகிய பெரும் வெப்பத்திலிருந்து நீங்கி முடிவற்ற இன்ப உலகமாகிய வீட்டினை அடைந்து, நீங்காது நிற்பர். அத்தகு அடி நிழலைச் சேராதவர்கள் சம்சாரமாகிய முடிவற்ற நெடுவழியை அடைவார்கள்.

495. காமனையும் காலனையும் வென்றுலக மூன்றினுக்கும்
சேம நெறியருளிச் செந்தா மரைப்புல்லிப்
பூமுதிராப் பிண்டிக்கீழ்ப் பொன்னெயிலுண் மன்னியநின்
நாம நவிற்றாதார் வீட்டுலக நண்ணாரே.

காமனையும், காலனையும் ஒருங்கே வென்று மூவுலகத்துக்கும் உய்யும் இன்ப வழியை அருளிச் செய்து அமரர்களால் அமைக்கப்பட்ட தாமரை மலர் மிசை எழுந்தருளி, வாடா மலர்களை யுடைய அசோக மரத்தின் கீழ் பொன் மதில்களால் சூழப்பட்ட சமவசரணத்தைச் சேர்ந்த உனது திருநாமத்தைப் புகழ்ந்து போற்றாதவர்கள் முக்தி உலகத்தை ஒரு நாளும் அடையமாட்டார்கள்.

496. இப்ப டித்துதித் தேகிய பின்னரே
துப்ப டுந்தொண்டை வாயவர் துன்னினார்
ஒப்பி லாதஇன் பத்துக் குளித்தனன்
எப்ப டித்துறக் கத்தியல் பென்றியேல்.

இவ்வாறு பலவிதமாகத் துதித்து இறைவனைப் புகழ்ந்து பணிந்து நின்ற சீதர தேவனைத் தேவ மாதர்கள் நெருங்கினர். அவரிடத்து இணையற்ற இன்பத்தை எய்தி அதிலே மூழ்கினான். இத்தகைய உலகமாகிய தேவலோகத்தின் இயல்பைக் கேட்பாயாகில் சொல்லுகின்றேன்.

497. ஒன்றின் மேல்வைத்த முப்பத்தேழ் நான்கிரண்டு
ஒன்றின் மேலொன்று மூன்றுமூன் றொன்பது
ஒன்று மேலொன்று மாந்துறக் கப்புரை
நின்ற மேலுற கீழ்நின்ற நீதியால்.

கற்ப உலகத்தில் அதாவது இரட்டை இரட்டையாக அமைந்துள்ள அவற்றுள், முதல் இரட்டை உலகமான சௌதர்ம - ஈசான கல்பத்தில் முப்பத்தொரு படலங்களும், அடுத்த சனத்குமார - மாகேந்திர கல்பத்தில் ஏழு படலங்களும், பிரம்ம - பிரம்மோத்திர கல்பங்களில் நான்கும், லாந்தவ - காபிட்டத்தில் இரண்டும், சுக்ர-மகா சுக்ர கல்பங்களில் ஒன்றும், சதார-சகஸ்ராரங்களில் ஒன்றும், ஆனத-பிராணத கல்பங்களில் மூன்றும், ஆரண-அச்சுத கல்பங்களில் மூன்றும், அதற்கு மேலுள்ள நவக்ரை வேயகத்தில் ஒன்பது படலங்களும், நாவணு திசையில் ஒன்றும், பஞ்சாணுத்தரத்தில் ஒன்றும் இவ்வாறு முறையாக படலங்கள் அமைந்துள்ளன. பதினாறு கல்பங்களிலும், மூன்று அகமிந்திர உலகத்திலும் அமைந்துள்ள மொத்த படலங்கள் அறுபத்து மூன்றாகும்.

498. இரண்டு மேழுமீ ரைந்துமீ ரேழுமாய்
இரண்டு மேற்சென்றிரு பத்தி ரண்டெய்த
திரண்ட வற்றின்மே லொன்றுசென் றாயுகம்
உரண்டெ ழும்கடன் முப்பத்து மூன்றுமே.

இனி இக்கல்பங்களில் வாழும் தேவர்களுடைய ஆயுள், முதல் இரண்டு கல்பங்களில் இரண்டு கடல்களும், அடுத்த இரண்டு கல்பங்களில் ஏழு கடல்களும், அடுத்த இரட்டைக் கல்பங்களில் பத்தும், அடுத்து பதிநான்கும், இதற்குமேல் நான்கு இரட்டைக் கல்பங்களில் முறையாக இரண்டிரண்டு கடல்கள் அதிகரித்தும், அதற்குமேலுள்ள அகமிந்திர உலகம் மூன்றிலுள்ள ஒவ்வொரு படலத்துக்கும் ஒன்று வீதம் ஏறிக்கொண்டே சென்று, இறுதியிலுள்ள பஞ்சாணுத்தர படலத்து தேவர்கள் முப்பத்து மூன்று கடல்கள் ஆயுள் பெறுவார்கள். இந்தக் கணக்கு தேவர்களின் ஏறிய ஆயுளாகும். இதற்குக் குறைந்த காலத்தும் இயற்கை எய்துவர்.

499. கடற்கோ ராயிரத் தாண்டு கடந்தமிர்
துடற்றும் வெம்பசி தீர மனத்துணா
கடற்கு நாள்பதி னைந்து கழித்துயிர்த்து
அடக்க மில்லைஇன் பத்தர்அத் தேவரே.

இவர்தம் உணவு முறை அவர்களின் ஆயுள் எத்தனை கடற்காலமோ அத்தனை ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறை தங்கள் பசி தீருவதற்கு மனதினால் அமுதத்தைப் பருகியும், ஒரு கடலுக்குப் பதினைந்து நாள் வீதம் தத்தம் கடலாயுளுக்கேற்ப (அதாவது ஒரு தேவனின் ஆயுள் பத்து கடல்கள் என்றால் நூற்றைம்பது நாள்களுக்கு ஒருமுறை) மூச்சு விட்டும், புலன்களின் அடக்கமின்றி இணையற்ற இன்பத்தைத் துய்த்தும், அத்தேவர்கள் வாழ்வர்.

500. எழுமு ழம்முதற் கேழரை வீழ்ந்திடை
ஒழிமு ழம்கற்பத் துச்சியின் மூன்றரை
விழுமு ழம்அரை ஐந்துடன் வீழ்ந்துமேல்
ஒழிமு ழம்ஒன்று அணுத்தரத் தோக்கமே.

இரட்டை இரட்டையாக உள்ள பதினாறு கல்பங்களில் முதல் இரண்டு கல்பங்களில் வாழும் தேவர்கள் உயரம் ஏழு முழமும், அதற்கடுத்துத் தொடர்ந்து இரண்டிரண்டு கல்பங்களின் தேவர்கள் உயரம், அரை அரை முழம் குறைந்து கடைசி இரட்டைக் கல்பங்களான ஆனத, பிராணத கல்பத்தவர்கள் உயரம் மூன்றரை முழமாகவும், அதற்கு மேலுள்ள நவக்ரைவேகயகம் முதலான ஐந்து படலங்களில் ஒவ்வொரு படலங்களில் முறையே அரைஅரை முழம் குறைந்து இரண்டு முழமாகவும் நவாணு திசையில் ஒன்றரை முழமாகவும் பஞ்சாணுத்தர அகமிந்திர தேவர்களின் உயரம் ஒரு முழமாகவும் இருக்கும்.

501. சோதமீ சானர்தம் மேலி ருவர்தம்
மோதிமண் ணொன்றிரண் டம்மு றையுறும்
நீதியா னிலங்கீழ் மூன்று நாலைந்தால்
ஓதியால் மேலமுன் னால்வ ருணர்வரே.

முதல் இரண்டு கல்பவாசிகள், நரகங்களில் முதல் நரகத்தளவும், அடுத்த இரட்டையர் இரண்டாம் நரகம் வரையிலும் தமது அவதியினால் நடப்பதையறிவர். அடுத்த அதற்கு மேலுள்ள பன்னிரண்டு கல்பவாசிகளில் முதல் நான்கு கல்பத்தவர் மூன்றாம் நரகம் வரையிலும், கடைசீ நான்கு கல்பத்தவர் ஐந்தாம் நரகம் வரையிலும் தமது அவதிக் ஞானத்தினால் அறியும் ஆற்றலுடையவராவர்.

502. ஆற தாவதைக் கேவச்ச மாய்ந்திடும்
ஈறி லவ்விரு வர்க்குமே ழாவதாம்
மாறி லாச்சவ்வ சித்தியில் வானவர்
ஊறி லாவோதி நாழிகை யுட்கொளும்.

அதற்குமேலுள்ள நவக்ரைவேயகத் தேவர்கள் ஆறாம் நரகம் வரையும், அடுத்த நவாணு திசை, பஞ்சாணுத்தர தேவர்கள் ஏழு நரகங்கள் வரையிலும் அறியும் ஆற்றல் மிக்க ஓதியை யுடையவராவர். மேலும் சர்வார்த்த சித்தி விமான தேவர்கள் திரச நாளிகை முழுதும் அறியும் குற்றமற்ற அவதி அறிவினையுடையவராவர்.

503. மிடையின் மேனியைத் தீண்டலிற் காண்டலின்
அடையு மின்சொலிற் சிந்தையின் மேவலின்
மடநல் லாரின் வரும்பய னெய்துவர்
அடைவி லோதியிற் சொன்னமுன் னைவரும்

முன்பே, ஐந்து பிரிவாகப் பிரித்து அவதியால் அறியும் முறை கூறிய அதே விதத்தில் இப்போது முதல் பிரிவினர் அதாவது சௌதர்ம, ஈசான கல்ப தேவர்கள் தேவமாதர்களுடன் உடலுறவு கொண்டு மகிழ்வர். அடுத்த இரட்டைக் கல்பவாசிகள் மகளிரின் மேனியைத் தீண்டியும், அடுத்த நான்கு கல்பத்தவர் மாதர்களைக் கண்களால் கண்டும், அடுத்த நான்கு கல்பத்து தேவர்கள் அரிவையரின் இனிய இசையைக் கேட்டும் இன்ப மெய்துவர்.

504. பல்ல மைந்தின்மேற் பன்னிரண் டாவதை
எல்லை யாக இரண்டிரண் டேறிடும்
அல்ல நால்வருக் கேழுமிக் கைம்பத்தைம்
பல்ல மாம்தேவி யர்ப்பர மாயுவே.

இனி தேவ மாதர்களின் ஆயுளைக் கூறுவோம். முதல் கல்ப தேவமாதர்களின் அதிகபட்ச ஆயுள் ஐந்து பல்ல மாகும். அதற்கு மேல் பன்னிரண்டாம் கல்பங்கள் வரையிலும் முறையே இரண்டிரண்டு பல்லங்கள் உயர்ந்து இருக்கும். அதற்கு மேலுள்ள நான்கு கல்ப மாதர்களுக்குக் கல்பம் ஒன்றுக்கு ஏழு ஏழு பல்லங்களாக ஏறிச் செல்லும். அந்தக் கணக்குப்படி அச்சுத கல்பத்து மாதர்களின் ஆயுள் ஐம்பத்தைந்து பல்லங்களாகும். இந்த அளவெல்லாம் அவர்தம் உயர்ந்த பட்ச ஆயுளைக் குறிக்கும்.

505. மோகமின் முனிவன தின்பம் போலவே
தோகையை யனையவர் தொடர்ச்சி யின்றியே
சோகமோ டுறுதுய ரின்றித் தானியல்
பாகுநல் லகமிந்தி ரத்தவ ரின்பமே.

மிகச் சிறந்த அகமிந்திர தேவர்கள் அடையும் இன்பமானது பற்றற்ற மாமுனிவர் தம் இன்பத்தைப் போல மயில் போன்ற அழகிய மாதர்களுடன் எத்தகைய தொடர்புமின்றி துயரம் சற்றுமின்றி இயல்பான ஏற்றத் தாழ்வற்ற இன்பமாகும். (அகமிந்திர உலகங்களில் பெண்களே இல்லை என்பதாம்)

506. சோதமர் சிறுமைச் சோதிட ருத்தமம்
ஓதிய வரைக்கட லுத்த வுத்தமம்
நீதியா னிலங்கீழ்மே லவர்க்கு நின்றதாம்
ஏதமில் இடையன பலவு மாகுமே.

ஜோதிஷ்க தேவர்களின் உயர்ந்த ஆயுளான ஒரு பல்லம் என்பது முதல் இரண்டு கல்பத்தவரின் குறைந்த ஆயுளாகும். இவ்வாறே மேன்மேலேயுள்ள இரட்டைக் கல்பவாசிகளின் குறைந்த ஆயுள் கீழ் இரட்டைக் கல்ப தேவர்களின் உயர்ந்த ஆயுளாகும். இதுவன்றி முன்பே குறிக்கப்பட்ட ஏறிய உத்தம ஆயுளுக்கு மேல் அரை கடல் ஆயுள் கூடுதலாகப் பெற்று உத்தம உத்தம ஆயுளைப் பெறுவர். இவ்வாறு குறைந்த உயர்ந்த ஆயுட்காலம் வரையறுக்கப்பட்டது. இடைப்பட்ட ஆயுள் என்பது இவற்றுக் கிடையில் எப்படி வேண்டுமானாலும் அமையும். (ஆயுள்-உத்தமம், மத்தியமம், ஜகன்னியம் என மூன்றாகக் கூறப்பட்டது)

507. இதுவம ருலகுத னியில்பி தன்கணச்
சதிரமைச் சாசார கற்பத் தின்வழி
யதிற்பெற வவனரு மத்தி யாயுகம்
மதுரநன் மொழிவரும் இன்ப மேவினான்.

இதுவரையில் கூறப்பட்டவை தேவருலகத்தின் இயற்கைத் தன்மைகளாகும். இத்தகு உலகத்தில் சகஸ்ரார கல்பத்தில் சூரியப்ரபை விமானத்தில் அந்தச் சீதரதேவன் இடைப்பட்ட ஆயுளைப் பெற்று தேவமாதர் தம் இனிய மொழி கேட்டு இன்புற்று வாழ்ந்தான்.

508. பதினறு கடன் மிசைப் பட்டவாயுகம்
பதினறு வருடம்ஆ யிரங்க டந்துணா
பதினறு பதினைநாள் விட்டு யிர்த்திடா
பதினறு பாவனை யாரைப் பாடுமே.

சீதர தேவனுடைய ஆயுள் பதினாறு கடலுக்குச் சற்று மேம்பட்டதாகும். எனவே இவன் பதினாறு வருடங்களுக்கு ஒருமுறை மனதினால் அமுதத்தை நினைத்து நிறைவுற்றும், பதினாறு பட்சங்களுக்கு ஒரு தடவை அதாவது எட்டு மாதங்களுக்கு ஒரு தரம் மூச்சு விட்டும், பதினாறு பாவனைகளினால் தீர்த்தங்கரர்களான இறைவனைப் போற்றிப் பாடி வணங்கி வரலானான்.

509. நாலரை முழமியல் பாமோர் மாத்திரை
மால்வரை யணுவள வாய்நி னைப்புழிச்
சாலவு நனியவர் போல வெய்தலும்
மாலுறு முருப்பல வாகு மேனியான்.

சீதர தேவனது உயரம் நான்கரை முழமாகும். அவன் நினைத்த மாத்திரத்தில் மலை போலவும் அடுத்த கணமே அணுவளவாகவும் வேண்டிய பல்வேறு உருவங்களைப் பெறும் வியப்பிற்குரிய ஆற்றல் பெற்ற உடலுடையவன். சற்றும் வேறுபாடு இல்லாமல் மற்றவர் போல் உருமாறுவதும் அவனால் இயலும்.

510. வாசமோ ரோசனை நின்று நாறிடும்
தேகமோ ரோசனை சென்றெ றித்திடும்
தூசணி மாசெய்தா மேனியின் குணம்
பேசலாம் படியது வன்று பீடினால்.

மேலும் அந்தத் தேவனது உடலின் இயற்கையான நறுமணம் ஒரு யோசனை அளவிற்கு வீசும், மேனியின் ஒளியும் அதே அளவிற்குப் பரந்து ஒளிரும், அணிந்திருக்கும் ஆடை அணிகளில் மாசு படியாது, பெருமைமிக்க அவனது திருமேனியின் தன்மை புகழ்ந்து கூறற் கரியதாகும்.

511. முன்செய்நல் வினையினான் முகிலின் மின்னனார்
இன்செய் வாயவ ரேந்து கொங்கையர்
வந்திடைச் சூழ்ந்திட வணங்க வானவர்
அந்தமி லின்பத்து ளமரன் மேவினான்.

அவன் செய்த நல் வினைப் பயனால் மேகத்து மின்னலைப் போன்ற அழகிய சிவந்த வாயினையும் நிமிர்ந்த தனங்களையு முடைய தேவ மாதர்கள் சூழ்ந்திருக்க, தேவர்கள் வணங்கி நிற்க குறைவற்ற இன்பத்தை எய்தி வாழ்ந்திருந்தான்.

512. மந்திரி தமிலனும் மரித்து மால்வனத்து
அந்தர மின்றிவா னரம தாகினான்
சிந்துரக் களிற்றின்மேல் செறிந்த வன்பினால்
வெந்துய ரறாவர வத்தை வீட்டினான்.

சத்தியகோடனுக்குப் பிறகு மன்னன் சிம்ம சேனனுக்கு அமைச்சனாக இருந்த தமிலன் தனது வாழ் நாள் முடிந்து, மன்னன் யானையாகப் பிறந்திருந்த அதே வனத்தில் குரங்காகப் பிறந்து முகத்தில் சிவந்த புள்ளிகளையுடைய அந்த அசனிகோட மென்னும் யானையின்பால் மாறாத அன்பு கொண்டிருந்தான். எனவே அசனிகோடத்தைக் கொன்ற அக்கொடிய பாம்பினை ஒழித்துக்கட்டினான்.

513. உரகம்வா னரத்தினா லுயிரி ழந்துபோய்
நகரமுன் றாவதை நண்ணி எண்ணரும்
பெரியமா துயரமா துற்ற தாற்றவும்
விரகினால் வினைகள்நின் றுதயம் செய்யவே.

வானரத்தினால் கொல்லப்பட்ட அந்தக் கோழிப்பாம்பானது தனது பாப வினைகள் முறைப்படி பயன்தரத் தொடங்கியதால் மூன்றாவது நரகத்தை அடைந்து நினைத்தும் பார்க்க முடியாத கணக்கற்ற பெருந்துன்பங்களை இடைவிடாது எய்தி நின்றது. (அது எங்ஙன மெனில்)

514. ஒட்டகங் கழுதைநாய் பாம்பு வாசியூன்
இட்டதோர் குழியின்மிக் கெழுந்து நாறிடும்
மட்டிடை வீழ்ந்ததில் அமைந்த யாக்கையான்
சுட்டதோர் பனைத்துணிப் போல தூங்கினான்.

ஒட்டகம், கழுதை, நாய், பாம்பு, குதிரை போன்ற பிராணிகளின் தசைகளை நிரப்பிய குழி எவ்வாறு நாறுமோ அதைக்காட்டிலும் மிகுதியாக நாறும்–நரக உயிர்கள் தோன்றும் பிறப்பிடத்தில் நரக சரீரத்தைப் பெற்று தீயில் கரிந்து பனந்துண்டு போல் தொங்கினான்.

515. முடையுடம் பதுவொரு மூழ்ந்த மேகலும்
படைமிடை பூமிமேற் பதித்த போழ்தினே
தடியொடு தண்டுவா ளேந்திரச் சூழ்ந்திடாக்
கடையற வதுக்கினார் காள மேனியார்.

இரண்டு நாழிகைக்குப் பிறகுத் தாங்கெணா துர்நாற்றமுடைய உடலைப் பெற்ற அந்த நாரகன் கொடிய ஆயுதங்கள் நிரம்பிய நரக பூமியில் தலைக்குப்புற வீழ்ந்த போது, முன்பே நரக துன்பத்தை அனுபவித்து வரும் பழைய நரக வாசிகள் தடி, வாள் போன்ற ஆயுதங்களினால் இவனைச் சூழ்ந்து கொண்டு உடல் சிதையுமாறு அடித்து நொறுக்கினார்கள்.

516. திரித்தனர் செக்குர லுட்பெ யர்ச்சியில்
உரித்தனர் கிழிகளை யொப்பச் சுற்றிடா
எரித்தனர் நிறைத்தமுள் ளிலவ மேற்றிநின்
றுரைத்தன ரெதிரெதிர் வளைந்த முள்ளின்மேல்.

அடுத்து கல் செக்கிலே யிட்டு அரைத்தனர், துண்டு துண்டாக உடல் தோலைக் கிழித்தார்கள். நெருப்பிலிட்டுக் கொளுத்தினர். முள் நிறைந்த இலவமரத்தில் ஏற்றி எதிர் எதிராக வளைந்த முள்ளின் மீது மாறி மாறி இழுத்துத் தேய்த்தார்கள்.

517. சீக்குழி யுட்புக நூக்கி னார்சிலர்
வாக்கினார் செம்பினை உருக்கி வாயிடைத்
தூக்கிமுண் மத்திகை யாற்பு டைத்திரு
பாக்கதாய்ப் பிளந்திடு வாரு மாயினார்.

அடுத்து, மேலும் சிலர் கூடி சீழ் நிறைந்த குழியிலே அமிழும் வண்ணம் தள்ளினர், செம்பினை நீராக உருக்கி வாயிலே ஊற்றினர், முள் போன்ற அமைப்பினையுடைய சம்மட்டிகளால் ஓங்கிப் புடைத்தார்கள், உடலை இரண்டாகப் பிளக்கவும் செய்தார்கள்.

518. மலையெனப் பெரியதோர் இருப்பு வட்டினை
உலையழல் போல்கணத் துருகச் சுட்டிடு
நிலையழற் குட்டத்து வெந்து நீடியாது
உலையின்வெம் பலியென வெழுந்து வீழுமே.

மலை போன்ற பெரிய இரும்புக் குண்டினைப் போட்டவுடனே உருகி நீராகுமாறு செய்யும் உலையழல் போன்ற வெப்பத்தையுடைய நெருப்புக் குழியில் அவனைத் தூக்கி எரிய அதில் வெந்த அவனது வுடல் துள்ளித்துள்ளி உலையில் கொதிக்கும் சாதம் போல மீண்டும் மீண்டும் எழுந்து விழுவான்.

519. பஞ்செழ வுலர்ந்துநாப் பரந்த வேட்கையான்
நஞ்சினை மடுத்துட னடுங்கி வீழ்ந்திடா
துஞ்சினுந் துஞ்சிடாத் துயர மாக்கடல்
எஞ்சலி லாயுக மிரக்க மொன்றிலான்.

பஞ்சு பரக்க மிகவும் உலர்ந்த நாக்கினையுடைய அவன் மிகுதியான தாகத்தைத் தணிக்க அவர்களால் கொடுக்கப்பட்ட நச்சு நீரைக் குடித்து, அஞ்சி இறந்து ஒழியுமாறு மூச்சடங்கி வீழ்ந்தாலும் இறக்காமல் இடையறாது துன்பத்தைத் தனக்குரிய ஆயுள் முழுமையும், அனுபவித்துத் துயரத்து உழன்றான்.

520. நின்றுநின் றுடற்றும்வெம் பசியை நோக்குவான்
ஒன்றிநின் றவர்நினைந் திட்ட வக்கணம்
சென்றுநஞ் செத்திசை யுஞ்செ றிந்திடா
பொன்றநின் றுடற்றிடும் கணந்தொ றும்புகா.

நீங்காது நின்று வாட்டும் பசியைப் போக்க முடியாது மிகவும் வருந்துவான், அப்போது சூழ்ந்துள்ளவர்கள் அவனுக்கு நஞ்சை உணவாகக் கொடுக்க நினைப்பார்கள். அக்கணமே நான்கு பக்கங்களிலுமிருந்து விஷமானது அவனை நெருங்க பசிதாங்காது அதைப் புசிப்பான் விஷ வேகத்தால் நிலை தடுமாறி மயங்கி ஒவ்வொரு கணமும் வேதனையில் உழல்வான்.

521. முழமிசை முப்பத்தோர் வில்லு யர்ந்தவன்
எழுமிசைப் புகைமுப்பத் தொன்று காதமும்
விழுமுடன் வெங்கனல் வெண்ணெய் போன்றுடைந்
எழுகடற் றானுமீ தவனி யற்கையே.

அவனது உயரம் முப்பத்தொன்றேகால் வில்லளவாகும். அவன் நரக பூமியிலிருந்து முப்பந்தொன்றேகால் யோசனை உயரம் எழும்பி அனலில் பட்ட வெண்ணெய்போல் நரக வெப்பத்தால் உருகி விழுவான். அவனது ஆயுளாகிய ஏழு கடற் காலத்தளவும், இத்தகு துன்பங்களை எய்துவது தான் அவன் இயல்பாகும்.

522. நெருப்பினை உமிழ்ந்திடும் நிழல்கள் புக்கிடில்
விருப்புறும் அவைவிப ரீத மாய்வரும்
செருச்செயா தாரிலைத் திரியுந் தீவளி
உரைப்பதென் அவன் இனி நரகத் துற்றதே.

நரகத்தில் தோன்றும் நிழலில் தங்கலாமென எண்ணி அங்கு அடைந்தால், அது அழலை உமிழும், இவன் எதையாவது விரும்பி நெருங்கினால் அவை விபரீதமாக மாறி எதிர் வினை புரியும், இவனோடு கொடும்போர் புரியாதவர் இல்லை. எப்பக்கமும் நெருப்புக் காற்று வீசும். இத்தகு நரக வாழ்க்கையின் கொடுமையைப் பற்றி எப்படிச் சொல்வது.

(வேறு)

523. நாகத்தைப் போலும் நாகம் நாகத்தால் நாக மெய்த
நாகத்தை நாகந் துய்த்து நாகந்தான் நரக மெய்த
மேகத்தி னோடும் திங்கள் வீழ்ந்துடன் கிடந்த தென்ன
நாகத்தின் கொம்பும் முத்தும் நரியெனும் குறவன் கொண்டான்.

அடுத்து மலைபோன்ற அசனிகோட மென்னும் யானையானது, கோழிப் பாம்பினால் மரணமடைந்து தேவலோக மடைய அக்கோழிப் பாம்பைக் குரங்கு கொன்றொழிக்க அப்பாம்பானது நரகமடைய, பிறைமதி மேகத்தோடு பூமியில் விழுந்தாற்போல் தனது தந்தங்களுடன் யானையின் உடல் நிலத்தில் சாய்ந்து கிடக்க, அதைக் கண்ட நரியன் என்னும் வேடன் அந்த யானையின் தந்தங்களையும் பிரித்து எடுத்துச்சென்றான்.

524. தந்தமும் முத்துங் கொண்டு தனமித்தன் தன்னைக்க கண்டு
வெந்திறல் வேடன் ஈந்து வேண்டுவ கொண்டு போனான்
சுந்தர முத்தும் கொம்பும் கொண்டுபின் வணிகன் பூர
சந்திரன் சரணம் சார்ந்து சாலவும் சிறப்புப் பெற்றான்.

அந்த வேடன் தான் கொண்டு சென்ற தந்தங்களையும், முத்துக்களையும் தனமித்திரன் என்னும் வணிகனிடம் கொடுத்துத் தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுச் சென்றான். வணிகன் அந்த அழகிய தந்தம், முத்துக்களை நகரத்து வேந்தன் பூரணசந்திரனைப் பணிந்து கொடுத்துப் பெரும் செல்வத்தை அடைந்தான்.

525. பைம்பொனும் மணியும் முத்தும் பவழமும் பயின்ற மஞ்சிற்
கொம்பிரண் டினையும் நாலு கால்களாய் கடைந்து கூட்டி
வம்பணி முலையி னார்கள் சூழ மற்றதனை ஏறிக்
கொம்பிடைப் பிறந்த முத்த மாலைகொண் டணிந்தி ருந்தான்.

பூரணச் சந்திர வேந்தன் அந்த யானைத் தங்தங்களை மணிகளும் முத்துக்களும் இழைக்கப்பட்ட தனது பொன்னாலாகிய கட்டிலுக்கு நான்கு கால்களாக அமைத்தும், முத்துக்களை மாலையில் சேர்த்து அணிந்தும், கச்சணிந்த அழகிய பெண்களுடன் இன்பத்தை எய்தியிருந்தான்.

526. இங்கிந்த மாற்றின் தன்மை கேட்டபின் யாருமில்லை
பொங்கிய புலத்தின் நீங்கி அறந்தலைப் படாது போவார்
சிங்கவே றனைய காளைக் கிதனை நீ செப்பு தீமைப்
பங்கநல் லறத்தி னாகும் எனப்பணிந் துவந்து போனாள்.

சிம்மச் சந்திர முனிவர் ராமதத்தையை நோக்கி, வினை வயத்தால் நேர்ந்த இந்த மாறுபாடான நிகழ்ச்சிகளைக் கேட்டறிந்த பிறகு, அறவாழ்வை ஏற்காது ஐம்புல இன்பங்களில் தொடர்ந்து ஈடுபடுவோர் யாரும் இலர், எனவே ஆண்சிங்கம் போன்ற வலிமை மிக்க உனது மகனுக்கு இவ்வரலாற்றைக் கூறுவாயாக,என அவன் கூறவும், முனிவரின் அடிகளை வணங்கி மகிழ்ந்து இராமதத்தை நகருக்குத் திரும்பினாள்.

527. மாதவன் பாதம் போற்றி மனோகர வனத்தி னின்றும்
ஆதரத் தோடும் போகி அரசனாம் மகனைக் கண்டு
காதலும் களிப்பும் நீங்கும் கதையினை யுரைப்பக் கேளா
மேதினிக் கிறைவன் சால வெய்துயிர்த் தவல முற்றான்.

மாமுனிவரது மலரடிகளை வணங்கி அழகிய அக்காட்டினின்றும் நகரம் புக்குத் தனது குமாரனாகிய பூரணச்சந்திரனைக் கண்டு அவனது ஆசையும் களிப்பும் நீங்கி உறுதியடையுமாறு முனிவன் கூறிய வரலாற்றினைக் கூறக் கேட்ட மன்னன் பெருமூச்செறிந்து பெரிதும் வருந்தினான்.

528. மண்ணினுக் கிறைவ னாயும் அறத்தினை மறந்து முன்னைப்
புண்ணியம் உலர்ந்த போழ்தின் விலங்கிடைப் புக்கு வீழ்ந்தான்
விண்ணினுக் கிறைவ னானான் விலங்கின் நின்று அறத்தை மேவி
அண்ணல்உன் தாதை நீயும் நல்லதீங் கறிந்து கொள்ளே.

இராமதத்தை மன்னனை நோக்கி, எனது அருமை மைந்தனே! உனது தந்தை மாமன்னனாக இருந்தும் ஜினதருமத்தினது பெருமை உணராது வாழ்ந்ததால் அவனது புண்ணியம் தீர்ந்தவுடன் விலங்காகப் பிறக்க நேர்ந்தது. ஆனால் அந்த விலங்குப் பிறவியில் நல்லறத்தை மேவி விண்ணுலகின் வேந்தனாயினான். எனவே நீயும் எது நன்மை தரத்தக்கது என்பதை அறிந்துகொள் என்றாள்.

529. இலங்கொளி மகுடம் சூடி இருநிலக் கிழவ னாயும்
புலங்கண்மேற் புரிந்தெ ழுந்து விலங்கிடைப் புரிந்து வீழ்ந்தான்
வவிலங்கிடைப் புலங்கள் தம்மை வெறுத்தவிண் ணுலகிற் சென்றான்
அலங்கலந் தாரி னாய்நீ அறிந்துகொள் நல்ல தென்றாள்.

மீண்டும் இராமதத்தை மகனை நோக்கி :

மைந்தனே! ஒளிமிக்க மணிமுடிதரிக்க இப்பெரிய நாட்டின் அரசோச்சும் உரிமை பெற்றிருந்தும் புலன்களை அடக்காது விருப்பப்படி வாழ்ந்து விலங்குப் பிறவியில் வீழ்ந்தான். ஆனால் அந்த விலங்குப் பிறப்பில் புலனடக்கத்தை மேற்கொண்டு ஆசையை வெறுத்து விண்ணுலகெய்தினான். எனவே அழகிய மாலையை அணிந்த அரசனே நன்மை யளிப்பது எது என்பதை அறிந்துகொள் என்று மறுமுறையும் அறிவுறுத்தினாள்.

530. பற்றினால் பூதி பாம்பாய்ச் சமரமாய்க் கோழிப் பாம்பாய்ச்
செற்றத்தால் தீயில் வெம்பு நரகத்தைச் செறிந்து நின்றான்
கொற்றவேல் குமர நீயிப் பிறவியைக் குறுக வஞ்சிற்
செற்றமும் பற்றும் நீங்கித் திருவறம் புணர்க என்றாள்.

மீண்டும் இராமதத்தைப் பூரணச்சந்திரனை நோக்கி கடும் பற்றினால் சத்தியகோடன் சமரீ என்னும் விலங்காகவும் அடுத்துக் கோழிப் பாம்பாகவும் கடுங்கோபத்தால் தொடர்ந்து கொடிய நரகத்தையும் அடைந்து உழல்கின்றான். எனவே வெற்றி தரும் வேலேந்திய மைந்தனே! மீண்டும் மீண்டும் பிறவிக்குக் காரணமான இந்த வாழ்விற்கு அஞ்சி, பகையும் பற்றும் நீங்கி நல்லறத்தை ஏற்பாயாக! என்றாள்.

531. அரசவுன் றாதை யுற்ற தருந்தவன் சீய சந்தன்
திரிவித வுலக மேத்தும் திருவடி பணிந்து கேட்டேன்
ஒருவிநீ மறத்தை யிந்தப் பிறப்புநீ ருகுத்தி டாதே
மருவுநீ யறத்தை யிந்த மாற்றது வடிவி தென்றாள்.

அடுத்து, வேந்தனே! உனது தந்தையார் எய்திய நிலையை யெல்லாம் மூவுலகும் பணியும் சிம்மச்சந்திர முனிவருடைய பாதங்களை வணங்கி அவர் கூறக்கேட்டேன். எனவே மேலான இம்மனிதப் பிறப்பின் தன்மையைப் பாழாக்காதே, கொடிய பாபத்தொழிலை ஒழித்து இந்தச் சம்சார வாழ்வு நிலையற்றது என்பதை உணர்ந்து ஜின தர்மத்தை ஏற்பாயாக என்றாள்.

532. ஆங்கவ ளுரைத்த இன்சொல் அறவிளக் கெரிப்ப வுள்ள
நீங்கிய திருளு நீங்க நெறியினைச் சிறிது கண்டான்
தாங்கருந் துன்ப முற்றான் தாதைபாற் காத லாற்பின்
தீங்கெலா நீங்க முத்தைக் கொம்பொடு தீயின் வைத்தான்.

அன்னையால் மிகவும் இனிமையாக உரைக்கப்பட்ட அற விளக்கின் ஒளியினால் அவன் உளளத்திருந்த மயக்க இருள் நீங்கி அமைதி எய்தியது. ஓரளவு நல்நெறியினை உணர்ந்தான். தனது தந்தையின் பால்கொண்ட பேரன்பினால் பெரிதும் வருந்தினான். பின்

தீமைக ளகலுமாறு தெளிவடைந்து தனது கட்டில் கால்களான தந்தங்களுடன் தான் அணிந்திருந்த முத்து மாலையையும் தீயிலிட்டு தகனம் செய்தான்.

533. பான்மை யங்குதித்த போழ்திற் பைந்தொடிப் பவழ வாயர்
நீர்மையங் குரித்த லாமை மனத்தகத் தகன்று நிற்பச்
சீர்மையங் குதிப்ப நன்மை செறிந்தனன் செறியுந் தோறும்
கூர்மையங் குதிக்கும் வைவேற் குமரனுக் குரகர் கோவே.

தரணேந்திரனே! கூர்மை மிக்க வேலாயுதத்தையுடைய பூரணசந்திரனுக்குத் தூய பான்மைத் தன்மை தோன்றிய போதே அவனது மனதினின்றும் அழகிய வளையல்களணிந்த பவழம் போன்ற வாயினையுடைய பெண்களிடத்துண்டாகிய காம உணர்வானது அகன்றது. சிறப்பளிக்கும் புண்ணிய வினைஉதயமானதால் நலம் பயக்கும் ஆன்ம தத்துவத்தை ஏற்கும் நல் ஞானமும் சேர்வதாயிற்று.

534. கலையர வல்கு லார்தம் காதலிற் கழுமல் காமன்
வலைமலை யனைய செல்வ நரகத்து வீழ்க்கு மாய
மலைவிலா நெறியை விட்டு மயங்கினார் நெறியைப் பற்றின்
நிலையிலா மாற்றின் நின்று சுழற்றகு நிமித்த மென்றான்.

மன்மதனது வலையாகிய மேகலையணிந்த அழகிய மகளிரது காதலில் மூழ்கிக்கிடத்தலும், மலைபோன்ற செல்வத்து ஆசையில் சிக்குதலும், மாய நரகத்திலே வீழ்த்தி விடும்; மற்றும் முன்னுக்குப்பின் முரணற்ற நன்னெறியின் நீங்கி மயக்கமுடைய மித்யாத்வ வழியில் செல்வது நிலையற்ற சம்சாரத்தில் கிடந்து உழல்வதற்குக் காரணமாக அமையும் என்று பூரணசந்திரன் தனது மனதை உறுதிப்படுத்தினான்.

535. அஞ்சினான் மாற்றைச் சால அடங்கினான் புலங்கள் தம்மை
நஞ்சையே போலு மென்று நடுங்கினான் தொடங்கல் செய்யான்
வஞ்சமும் படிறும் பற்றும் செற்றமும் களிப்பு மாற்றிப்
பஞ்சணு வதங்க ளோடு சீலங்கள் பயின்று சென்றான்.

மேலும் அவன் பிறந்து இறந்து உழலும் இந்தச் சம்சார வாழ்வை எண்ணி மிகவும் நடுங்கினான். புலன் ஆசைகளை நஞ்சுக்குச் சமமாக எண்ணி மிகவும் நடுங்கினான். எனவே அவை பற்றி சிந்தியாதொழிந்தான். வஞ்சம், பொய், கபடம், செற்றம், ஆசை போன்ற உணர்வுகளை நீக்கி ஐந்து அணுவிரதங்களையும், அவை நிலைபெறுவதற்கான ஒழுக்கங்களையும் கடைப்பிடித்து வந்தான்.

536. சித்தமெய் மொழிகள் மூன்றிற் சினவரன் செழும்பொற் பாதம்
மத்தகத் தணிந்து நான்கு மங்கலம் பயின்று வையத்து
உத்தமர் தம்மை யேத்திச் சரணம்புக் குயிரை யோம்பித்
தத்துவம் பயின்று தானந் தவத்தொடு தயாவிற் சென்றான்.

அது முதல் பூரணசந்திரன் மனம், மொழி செயல்களால் ஒன்றி ஜினபகவானது பாதகமலங்களைச் சிரசில் தரித்து அருகர், சித்தர். சாது, தர்மம் என்னும் நான்கு மங்கலங்களை இடையறாது சிந்தித்து, இவ்வுலக உத்தமர்களாக பஞ்சபரமேட்டிகளது அடிகளைப் பணிந்து, அனைத்துயிர்களையும் பாதுகாத்து, உறுதி பயக்கும் உயர் தத்துவத்தை உணர்ந்து, உத்தம தானங்களைச் செய்து தயவும், தவ உணர்வும் சேர்ந்த உள்ளத்துடன் வாழ்ந்தான்.

537. இறைவன தறத்தை யேந்தல் சேர்ந்தபின் இராம தத்தை
கறைகெழு வேலி னானைக் கைவிடா திருந்து நோற்று
நிறையழி காத லாலே நிதானத்து நின்று சென்றாள்
கறையிலா வாயு நீங்கிக் கற்பமா சுக்கி லத்தே.

பூரணச்சந்திரன் ஜிநபகவானால் அருளப்பட்ட நல்லறத்தை முழுமையாக ஏற்ற பின்பும் இராமதத்தை வெற்றிவேலினையுடைய தனது மகனைவிட்டு நீங்காது உடன் இருந்து உயர் நோன்புகளை மேற்கொண்டு நோற்று தனது மகன் மீதுள்ள மாறாக் காதலால் மீண்டும் அவனை மகனாகப் பெறுவேன் என்னும் நிதானத்துடன் ஆயுள் முடிய மகாசுக்ர கல்பத்தே தேவனாகத் தோன்றினாள்.

538. பாகரப் பிரபை யென்னும் விமானத்துப் பருதி போல
பாகரப் பிரப ன்னுந் தேவனாய்ப் பாவை தோன்றி
நாகர்வந் திறைஞ்ச வின்ப மூர்த்தியாய் நடுவி ருந்தாள்
சாகரம் பத்தோ டாறு தனக்குவாழ் நாள தாமே.

இராமதத்தை மகாசுக்ர கல்பத்தில் பாகரப்ரபை என்னும் விமானத்தில் கதிரவனைப்போல 'பாகரப்ரபன்' என்னும் தேவனாகத் தோன்றினாள். அமரர்கள் அடிபணிந்து நிற்க இன்பமே உருவாகி அனைவர்க்கும் நாயகமாய் இருந்த அத்தேவனது ஆயுள் பதினாறு கடற்காலமாகும்.

539. ஈரெட்டா மாயி ரத்தாண்டு இடைவிட்டின் னமுத முண்ணா
ஈரெட்டாம் பக்கம் தன்னை யிடையிடை விட்டு யிர்த்தும்
ஓரெட்டின் பாதி யாய நரகத்தி லவதி யொட்டா
ஓரெட்டு குணங்கள் வல்ல வுடம்பைந்து முழமு யர்ந்தான்.

அந்த அமரன் பதினாறு ஆண்டிற்கு ஒருமுறை அமுதத்தை மனதினால், பதினாறு பருவங்களுக்கு ஒரு தடவை மூச்சுயிர்த்து, நான்கு நரகங்கள் வரை அறியும் அவதியைப் பெற்று எட்டு வகைச் சித்திகளை எய்தும் திவ்ய உடலுடன் ஐந்து முழ உயரமாக விளங்கினான்.

540. மின்னரிச் சிலம்பி னோசை மிளிருமே கலையி னோசை
இன்னரம் பிசையி னோசை யெழுந்தகீ தத்தி னோசை
மின்னுடங் கிடையி னார்தம் விளைந்துலா மொழியி னோசை
தன்னுளங் கவர இன்சொல் வீசாரத் தோடு நாளால்.

மேலும், 'பாகரப்பன்' மின்னலைப் போன்ற இடையுடைய பெண்களின் ஒளி பொருந்திய சிலம்பு பரல் ஓசையையும், அவர்களால் இசைக்கப்படும் இசை நரம்புகளின் இனிய ஓசையையும், அவர்கள் பாடும் இனிய பாடலையும், அமுதம் போன்ற அவர்தம் பேச்சினையும் அனுபவித்து அவை தன்னுள்ளத்தைக் கவர அந்தச் சொல் அளவில் மாதர் இன்பத்தை முழுமையாகப் பெற்றிருந்தான்.

541. கொற்றவன் பூர சந்தன் குணக்கடல் தோன்றிப் போகி
மற்றந்த விமானத் தின்கண் வைடூரியப் பிரபை தன்னுட்
பெற்றியாத் தோன்றித் தானும் வைடூரியப் பிரப னானான்
முற்றுமுன் னுரைத்த வாயு முதலவிம் மூர்த்திக் காமே.

அடுத்து பூரணச்சந்திர வேந்தன் தனக்குப் பான்மை நிறைந்திருந்த நிலையில் ஆயுள் முடிந்து அதே மகா சுக்ரகல்பத்தில் வைடூரியப்ரபை என்னும் விமானத்தில்தனது புண்ணியப் பயனால் தோன்றி 'வைடூரியப்பரபன்' என்னும் பெயருடன் முதலில் கூறிய வண்ணமே ஆயுள், உயரம் முதலியவைகளைப் பெற்றிருந்தான்.

(வேறு)

542. பாடலின் மயங்கியும் பவழ வாயினார்
ஆடலின் மயங்கியும் அரம்பை யாரொடு
மாடமும் சோலையு மலையும் வாவியும்
ஊடுபோய் நீடவர் உவந்து வைகுநாள்.

பாகரப்ரபை தேவர்களான அவர்கள் இருவரும் தேவ மாதர்களின் பாடலிலும், பவழம் போன்ற வாயினையுடைய ஆடல் மகளிரின் ஆட்டத்திலும் மயங்கி தேவ மகளிருடன் மாளிகைகள், மலர்ச்சோலைகள், மலைகள், நீர் நிலைகள் இவற்றினால் பெரும் இன்பத்தில் மகிழ்ந்து வாழ்கின்ற நாளில்,

543. தூயசந்திரன் கலை பெருக நாடொறும்
தீயவன் காளகம் தேயு மாறுபோல்
சீயசந் திரன்தவம் பெருக நாடொறும்
காயமும் கசாயமுங் கரிச மானவே.

இந்த மண்ணுலகில் தூய வளர்மதியின் கலைகள் நாள்தோறும் வளர்ந்து வரும் போது, அதன்பால் அமைந்த கொடிய கருமை நிறம் பொருந்திய பகுதியானது தேய்வதுபோல் சிம்மச் சந்திர முனிவரது தவம் பெருகப் பெருக ஒவ்வொரு நாளும் அவரது உடலும், கஷாயத் தன்மைகளும் தேய்ந்து மென்மை எய்தின.

544. ஈற்றிலா ராதனை விதியி லேந்தல்தான்
ஆற்றலுக் கேற்றவா றன்ன பானமும்
சாற்றிய வகையினால் சுருக்கிச் சையமேல்
ஏற்றினான் தன்னை நின்றிலங்கும் சிந்தையான்.

முனிவர்களுக்குக் கூறப்பட்ட நால்வகை ஆராதனைகளில் நான்காவதான தவத்தை விதிப்படி இயற்றி தனது ஆற்றலுக்கேற்ப பரமாகமங்களில் கூறியபடி, அன்னபானங்களைச் சுருக்கி 'ஸம்யமம்' என்னும் தகுதிகளில் தன்னை உயர்த்தி தூய ஆன்ம தியானத்தை உடையவனாக விளங்கினான்.

545. சித்தமெய் மொழிகளிற் செறிந்து யிர்க்கெலாம்
மித்திர னாயபின் வேத னாதியில்
ஒத்தெழு மனத்தனாய் உவகை உள்ளுலாய்த்
தத்துவத் தவத்தினால் தனுவை வாட்டினான்

தூய மனவசன செயல்களில் நிலைத்து நின்று அனைத்து உயிர்களிடத்தும் அருள் நிறைந்தவனாய் தத்துவத் தெளிவு பெற்று ஆன்ம உணர்வில் மகிழ்ச்சி எய்தி தனது உடலை வருத்தி மிகவும் மெலிவடைந்தான்.

546. திருந்தினார் தேய்வுகண் டெழுமந் நீசர்போல்
நரம்பெலா மெழுந்தன நல்ல மாந்தரின்
அரங்கின நயனமுள் ளருந்த வக்கொடி
இருந்தமை காட்டிநின் றிலங்கு நீரவே.

மேலோர்களுடைய மெலிவினைக்கண்டு கீழ்மக்கள் தலையெடுத்தல் போல் நரம்புகளெல்லாம் புடைத்து மேலெழும்பின. பெரியோரின் தாழ்வு கண்டு ஒடுங்கி நிற்கும் உயர்ந்தவர்களைப் போல் கண்கள் உள்ளடங்கின. இனி பயன்தரப்போகும் தவக்கொடி உள்ளே அடங்கிக் கிடப்பதை அவரது சரீரமே விளக்கமுற காண்பிக்கும் திறம் பெற்றது.

547. தவத்தழல் எழுந்துயி ராம்பொற் றாதுவைத்
துவக்கறச் சுடச்சுடத் தோன்று நீரொளி
நிவத்தலா னின்றொளி துளும்பு மூர்த்தியான்
உவத்தலும் காய்தலும் ஒருவி னானரோ.

தவம் எனும் அக்னியில், உயிர் என்னும் பொன் தாதுவை அதிலுள்ள களங்கம் அறும்படி சுடச்சுட, தோன்றும் ஆன்மத்தன்மையான ஒளி பிரகாசிப்பதால், திவ்ய தேகத்தை உடைய அம்முனிவரன் விருப்பு வெறுப்பினின்றும் நீங்கி மிளிர்ந்தான்.

548. தனுவது தனுவதாய்த் தனுவ தாயது
மனநிறை பொறைதவம் மகிழ்ச்சி யெய்துவ
நினைவது வினையினை நின்று திர்த்தது
முனிவனுந் தனதுமேற் கோளின் முற்றினான்.

இம்முனி புங்கவனது உடலானது மிகவும் மெலிந்து நைந்தது. ஆனால் மனமானது நிறைந்த அமைதியினாலும், அகத்தவப் பயனாலும் மகிழ்வெய்தியது. அத்தகு பான்மை ஞானத்தன்மையானது நெடுங்காலமாக நின்ற மித்யாத்வ வினையை அடியோடு ஒழித்தது. சிம்மசந்திர முனிவனும் தனது உயர்தன்மையாகிய நல்லொழுக்கத்தில் நிலைபெற்று நிறைந்து நின்றான்.

549. எரியினுள் மூழ்கிய தென்ன தன்னதாய்ப்
பரிசையை வென்றவப் பரம மாமுனி
அருகனை யிருதய கமலத் துள்ளிரீஇத்
தெரிவருஞ் சித்தரைச் சென்னி சேர்த்தினான்.

நெருப்பில் மூழ்குவது போன்ற மிகவும் அரிய தவமாகிய துன்பங்களைப் பொறுத்து வெற்றி பெறுதலை குறைவற ஆற்றிய அம்மாமுனிவன் அருக பெருமானை இதயக் கமலத்தில் இருத்தி, அறிதற்கரிய சித்தரை சிரசிலே தரித்தான்.

550. சென்னியி லிடுங்கவ சத்தொ டத்திரம்
பன்னரும் மூவரும் பாங்கி னாயபின்
தன்னுடம் புயிரினைத் தடறு வாளென
உன்னிநின் றைம்பதம் உன்னி யோதினான்.

மேலும் சித்தரை சிந்தித்தலாகிய தலைக்கவசத்துடன் ஆச்சாரிய, உபாத்தியாய, சாதுக்கள் தியானம் என்னும் ஆயுதங்களை முறைப்படி அமைத்துத் தனது உடலும், உயிரும் உறையும் வாளும் போல் வெவ்வேறான பொருள் என்பதை உறுதியாக பாவித்து, பஞ்ச பரமேட்டிகளை உயர்வாக தியானித்து மனத்தே ஜபித்தனன்.

551. கண்ணினால் களங்கமில் நிலையைக் கண்டிடா
பண்ணுறப் பெரியவர் பாதஞ் சேர்ந்தவப்
புண்ணியச் சுருதியைச் செவியிற் பூரியா
விண்ணுல கடைந்தனன் வென்றி வீரனே.

வினையை வெல்வதில் வீரனாகிய அம்முனிவன் நற்காட்சியினால் மாசற்ற தத்துவ நிலைகளை உறுதிப்படுத்தி, ஆன்மா நலமளிக்கும் ஆப்தர்களாகிய மகான்களின் அடிகளைப் பொருத்தி, திரவ்ய தத்துவ சாரத்தை செவிகளில் நிரப்பி மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலகெய்தினான்.

552. பொருவிலா உலகெனும் புரவ லர்க்குநற்
கிரிவமாம் கேவச்சத் தொன்ப தாவதை
மருவினான் மாலொளி விமான மற்றதிற்
பிரிதியங் கரத்தினைப் பெரிய வீரனே.

மன்னர்களின் கழுத்தைப்போன்ற ஒப்பிலா விண்ணுலகமாகிய 'நவக்ரைவேய' கல்பத்தின் ஒன்பதாம் பகுதியாகிய மிகச்சிறந்த ஒளிமிக்க விமானத்தில் அம்முனிவராகிய ஆன்ம வீரன் 'பிரீதிங்கரம்' என்னும் அந்த விமானத்தில் பிரீதிங்கரன் என்னும் பெயருடைய தேவனாகினான்.

553. முப்பத்தோ ராழியான் முடிந்த யாயுகம்
முப்பத்தோ ராயிரத் தாண்டு விட்டுணா
முப்பத்தோர் பக்கத்தைக் கடந்து யிர்த்திடா
முப்பத்தோர் நான்கதி சயரை வாழ்த்துமே.

முப்பத்தொரு கடல்கள் ஆயுளைப் பெற்ற அமரன் முப்பத்தொரு ஆண்டுகளுக்கு ஒருமுறை மனதினால் அமுதம் உண்டு பதினைந்தரை மாதங்களுக்கு ஒரு தடவை மூச்சு இழுத்து முப்பத்துநான்கு அதிசயங்களை அடைந்த அருகப்பெருமானை இடையறாது துதித்து வரலானான்.

554. அவதியால் நரகமா றாவ தாய்ந்திடா
யுவதியால் வரும்பயன் ஒன்று மின்றியே
சிவகதி யவர்க்குப்போ லிவர்க்கு நல்வினை
அவதியி னுதயத்தால் ஆகு மின்பமே.

அந்த அமரன் நல்வினைப் பயனால் ஆறாவது நரகம் வரை அறியும் ஓதியைப் பெற்றவன், அழகிய இளம் பெண்ணின் தொடர்பே இல்லாதவன், இணையற்ற அவதி ஞானப் பயனால் சித்தர்களைப் போன்ற இன்பத்தை எய்தியிருந்தான். (இவை அகமிந்திர தேவர்களின் இயல்பாகும்).

555. அஞ்சிறப் பயர்வுழி அறிவனா ணையால்
அஞ்சிரண் டடிநடந் திறைஞ்ச லல்லது
அஞ்சிவந் தொருவர்தம் ஆணை யிற்செலார்
அஞ்சொலார் இன்மையா ரகநூல் லிந்திரர்.

பெண்களே இல்லாத அகமிந்திர உலக தேவர்கள் அருகப்பெருமானுக்கு கல்பவாசி தேவர்கள் இயற்றும் பஞ்சகல்யாணப் பெருஞ்சிறப்பினை ஆற்றுங்காலத்தும், இறைவனது பெருமைக்கேற்ப தமது இடத்தைவிட்டு ஏழடி நடந்து சென்று அங்கிருந்தே திசைநோக்கி வணங்குதலன்றி, யாருடைய ஆணைக்கும் கட்டுப்பட்டு எங்கும் செல்லமாட்டார்கள். இதுவும் அகமிந்திரர் இயல்பாகும்.

556. இன்பமே இடையறா தெழுத லல்லது
துன்பமும் கவலையும் தோகை யன்னவர்க்கு
அன்புநண் பும்இலா அகமிந் திரத்தவன்
முன்புபின் பழிந்தெய்தா மூர்த்தி யாயினான்.

அகமிந்திர உலக தேவனாகிய அவன் இடையறா இன்பத்தை எய்தியதால் உடல் துன்பமோ, மனக்கவலையோ இல்லாதவன், மயில் போன்ற அழகிய மாந்தர்கள் தொடர்பே இல்லாததால் அவரால் எய்தும் அன்பு, ஆசை அற்றவன்; இறுதி வரை ஊறு அடையாத ஒப்பற்ற உடலையுடையவன்.

557. அருந்தவம் பொருந்திய சீல மாதியால்
திருந்திய நால்வருந் தேவ ராயினார்
பெருந்துயர் விலங்கிற்றீ வினையில் வீழ்ந்துபின்
பொருந்தினான் நிரயத்துப் பூதி போகியே.

அரிய தவத்தினாலும் அதற்கான ஒழுக்கம் முதலியவற்றாலும், நல்வழிப்பட்ட நால்வரும் அதாவது சிம்மசேன மன்னன், அவன் தேவி இராமதத்தை மக்கள் சிம்மசந்திரன், பூரணச்சந்திரன் ஆகியோர் தத்தம் நிலைக்கேற்ப விண்ணுலக வாழ்வை அடைந்தார்கள். அமைச்சன் சத்தியகோடன் தனது தீவினைப் பயனால் துயர்மிக்க விலங்குப் பிறவிகளை எய்தி முடிவில் கொடிய நரகம் அடைந்தான்.

(வேறு)

558. பகைவனும் தனக்குத் தானே பாவங்கள் பயின்று சொல்லி
நகையமை நண்பு தானே நல்வினைக் கேது வாயிற்
பகையுற விரண்டும் பாவ புண்ணியப் பயன்க ளாதல்
இகன்மத யானை பாந்தள் இரண்டினும் தெளிந்த தன்றே.

பகையுணர்வோடு சிந்தித்து செயல்படுவதால் தனது ஆன்மாவிற்கு தானே பகைவனாக அமைந்து பாவத்தை சேர்ப்பதும், இனிமை மிக்க நட்புணர்வோடு அமைதல் புண்ணியத்தை எய்தவும் காரணமாகின்றது; பகையும், நட்பும் பாவ புண்ணிய பயன்களாகும். இதன் உண்மையை , வலிமை மிக்க அசனிகோடம் என்னும் யானை, கோழிப்பாம்பு இவற்றின் தன்மைகளால் அவை எய்திய பயன்கள் மூலம் நன்கு தெளிந்தோமல்லவா.

559. வாளரி யுழுவை கைம்மா வலையிடைப் பட்டு முய்வ
நீளர ணாய நல்ல வினையது நின்ற போழ்தில்
கோளரி ஏறு தன்னைக் குறுநரி யேனுங் கொல்லும்
நீளர ணாய நல்ல வினையது நீங்கி னாங்கே.

ஆன்மாவிற்குப் பெருங்காவலாக அமைந்த அரண் போன்ற புண்ணியத்தால் வலிமைமிக்க சிங்கம், புலி, யானை போன்ற விலங்குகள் வலையில் சிக்கினாலும் தப்பிப் பிழைத்துப்போகும்; நல்வினைத் துணை நீங்குமானால் சிறு நரியும் பலம்மிக்க சிங்கத்தையும் கொன்றுவிடும்.

560. தீக்கதிச் செலவினை நீக்கிச் சிந்தையின்
நோக்கிலாப் பொருளையும் நோக்கி யின்பத்தை
வீக்கியிம் மாற்றினை நீக்கி வீட்டினை
ஆக்கும்நல் லறத்தினை அமர்ந்து செய்மினே.

பவ்யர்களே! நரகம் முதலிய தீய கதிகளில் செலுத்தும் சினம், ஆசை போன்ற ஆன்ம விரோதத் தன்மைகளை ஒழித்து புலன்களால் உணரமுடியாத உயிர் முதலிய பொருட் தன்மைகளை உயர் ஞானத்தால் உணர்ந்து, ஆன்ம இன்பத்தை நிலையாக நிறுத்தி பிறத்தல், இறத்தலாகிய சம்சார வாழ்வை நீக்கி, வீடுபேற்றினை அளிக்கும் நல்லறத்தினை விரும்பி செய்வீர்களாக.

நால்வரும் சுவர்க்கம் புக்க சருக்கம் முற்றுப்பெற்றது.